பாவியை நீதிமானாக்குகிறவரின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள். பாவம் இன்னது என்ற அறிவு இந்நாட்களில் குறைந்து வருகிறது. ஆகவே பாவத்தைக் குறித்த சிந்தனையும் பாவம் செய்யாத பரிசுத்த வாழ்க்கை வாழும் வாஞ்சை தேவ பிள்ளைகள் மத்தியில் உருவாகவே இப்புத்தகத்தை எழுதுகிறேன். வேதம் நமக்கு பாவங்களையும் அதன் விளைவுகளையும் எடுத்துக் காட்டுகிறது. நம்மை அதனின்று இரட்சிக்க தேவன் தம் ஒரே பேறான குமாரனையே பலியாக ஒப்புக்கொடுத்தார் என்பதையும் எடுத்துக் காட்டுகிறது.

அவர் அன்பின் விளைவாக நாம் பெற்றுக்கொள்ளும் மகிழ்ச்சியான வாழ்வை புரிந்து கொள்ள இப்புத்தகம் ஏதுவாயிருக்கும் என்று நம்புகிறேன். தேவனுடைய இந்த மகா பரிசுத்த வசனங்கள் நம்மோடு இடைபடுவதாக.

யோவான் 8 : 34. இயேசு அவர்களுக்குப் பிரதியுத்தரமாக: பாவஞ்செய்கிறவன் எவனும் பாவத்துக்கு அடிமையாயிருக்கிறான் என்று மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்.

1 யோவான் 3 : 6. அவரில் நிலைத்திருக்கிற எவனும் பாவஞ்செய்கிறதில்லை; பாவஞ்செய்கிற எவனும் அவரைக் காணவுமில்லை, அவரை அறியவுமில்லை.

7. பிள்ளைகளே, நீங்கள் ஒருவராலும் வஞ்சிக்கப்படாதிருங்கள்; நீதியைச் செய்கிறவன் அவர் நீதியுள்ளவராயிருக்கிறதுபோலத் தானும் நீதியுள்ளவனாயிருக்கிறான்.

8. பாவஞ்செய்கிறவன் பிசாசினாலுண்டாயிருக்கிறான்;

ஏசாயா 59 : 2. உங்கள் அக்கிரமங்களே உங்களுக்கும் உங்கள் தேவனுக்கும் நடுவாகப் பிரிவினை உண்டாக்குகிறது; உங்கள் பாவங்களே அவர் உங்களுக்குச் செவிகொடாதபடிக்கு அவருடைய முகத்தை உங்களுக்கு மறைக்கிறது.

எசே 3 : 20. அப்படியே, நீதிமான் தன் நீதியை விட்டுத் திரும்பி, நீதிகேடு செய்யும்போதும், நான் அவன்முன் இடறலைவைக்கும்போதும், அவன் சாவான்; நீ அவனை எச்சரிக்காதபடியினாலே அவன் தன் பாவத்திலே சாவான்; அவன் செய்த நீதிகள் நினைக்கப்படுவதில்லை; அவனுடைய இரத்தப்பழியையோ உன் கையிலே கேட்பேன்.

21. நீதிமான் பாவஞ் செய்யாதபடிக்கு நீ நீதிமானை எச்சரித்தபின்பு அவன் பாவஞ்செய்யாவிட்டால், அவன் பிழைக்கவே பிழைப்பான், அவன் எச்சரிக்கப்பட்டான்; நீயும் உன் ஆத்துமாவைத் தப்புவித்தாய் என்றார்.

எசே 18 : 4. இதோ, எல்லா ஆத்துமாக்களும் என்னுடையவைகள்; தகப்பனின் ஆத்துமா எப்படியோ, அப்படியே மகனின் ஆத்துமாவும் என்னுடையது; பாவஞ் செய்கிற ஆத்துமாவே சாகும்.

1 தீமோ 5 : 24. சிலருடைய பாவங்கள் வெளியரங்கமாயிருந்து, நியாயத்தீர்ப்புக்கு முந்திக்கொள்ளும்; சிலருடைய பாவங்கள் அவர்களைப் பின்தொடரும்.

பிரசங்கி 2 : 26. தேவன் ….. பாவஞ்செய்கிறவனுக்கோ தமது பார்வைக்கு நல்லவனாயிருக்கிறவன் வசமாய்வைத்துவிட்டுப் போகும்பொருட்டுச் சேர்த்துக் குவித்துவைக்கும் தொல்லையை அவர் நியமித்திருக்கிறார்;.

நெகேமியா 5 : 9. ….நம்முடைய பகைஞராகிய புறஜாதியார் நிந்திக்கிறதினிமித்தம் நீங்கள் நம்முடைய தேவனுக்குப் பயந்து நடக்கவேண்டாமா ?

செப்பனியா 2 : 2. நீங்கள் உங்களை உய்த்து ஆராய்ந்து சோதியுங்கள்.

## 1. விக்கிரகாராதனை :

### தேவ கட்டளை

யாத் 20 : 23. நீங்கள் எனக்கு ஒப்பாக வெள்ளியினாலே தெய்வங்களையும் பொன்னினாலே தெய்வங்களையும் உங்களுக்கு உண்டாக்கவே வேண்டாம்.
1 சாமுவேல் 15 : 23, ரோமர் 1 : 25.

## 4. தேவனுக்கு பயப்படாதிருத்தல் :

### தேவ கட்டளை

2 நாளா 19 : 7. ஆதலால் கர்த்தருக்குப் பயப்படுகிறபயம் உங்களிடத்தில் இருக்கக்கடவது.

லூக் 12 : 5. நீங்கள் இன்னாருக்குப் பயப்படவேண்டுமென்று உங்களுக்குக் காண்பிக்கிறேன்: கொலை செய்த பின்பு நரகத்திலே தள்ள வல்லமையுள்ளவருக்குப் பயப்படுங்கள்; ஆம், அவருக்கே பயப்படுங்கள் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்.

ஏசா 66 : 2

### நியாயத்தீர்ப்பு

பிர 8:13 துன்மார்க்கனோ நன்றாயிருப்பதில்லை; அவன் தேவனுக்கு முன்பாகப் பயப்படாதிருக்கிறபடியால், நிழலைப்போலிருக்கிற அவனுடைய வாழ்நாள் நீடித்திருப்பதுமில்லை.

2 இரா 17 : 25.

### தீர்வு

நீதி 8 : 13. தீமையை வெறுப்பதே கர்த்தருக்குப் பயப்படும் பயம்.

## 5. கர்த்தர் நாமத்தை வீணிலே வழங்குதல் :

### தேவ கட்டளை

யாத் 20 : 7. உன் தேவனாகிய கர்த்தருடைய நாமத்தை வீணிலே வழங்காதிருப்பாயாக;

### நியாயத்தீர்ப்பு

யாத் 20 : 7. …. கர்த்தர் தம்முடைய நாமத்தை வீணிலே வழங்குகிறவனைத் தண்டியாமல் விடார்.

### தீர்வு

நீதி 30 : 9. நான் பரிபூரணம் அடைகிறதினால் மறுதலித்து, கர்த்தர் யார் என்று சொல்லாதபடிக்கும்; தரித்திரப்படுகிறதினால் திருடி, என் தேவனுடைய நாமத்தை வீணிலே வழங்காதபடிக்கும், என் படியை எனக்கு அளந்து என்னைப் போஷித்தருளும்.

## 6. கர்த்தரை பரீட்சை பார்த்தல் :

### தேவ கட்டளை

உபா 6 : 16. நீங்கள் மாசாவிலே செய்தது போல, உங்கள் தேவனாகிய கர்த்தரைப் பரிட்சை பாராதிருப்பீர்களாக.

### நியாயத்தீர்ப்பு

1 கொரி 10 : 9. அவர்களில் சிலர் கிறிஸ்துவைப் பரீட்சைபார்த்து, பாம்புகளால் அழிக்கப்பட்டார்கள்;

### தீர்வு

மத் 4 : 7. அதற்கு இயேசு: உன் தேவனாகிய கர்த்தரைப் பரீட்சை பாராதிருப்பாயாக என்றும் எழுதியிருக்கிறதே என்றார்.

துரும்பைப் பார்க்கிறதென்ன?

42. ....மாயக்காரனே! முன்பு உன் கண்ணிலிருக்கிற உத்திரத்தை எடுத்துப்போடு, பின்பு உன் சகோதரன் கண்ணிலிருக்கிற துரும்பை எடுத்துப்போட வகைபார்ப்பாய்.

## 80. நாள் பார்த்தல் :

### தேவ கட்டளை

லேவி 19 : 26. .....குறிகேளாமலும், நாள்பாராமலும் இருப்பீர்களாக.

உபா 18 : 14. .....இந்த ஜாதிகள் நாள்பார்க்கிறவர்களுக்கும் குறிசொல்லுகிறவர்களுக்கும் செவிகொடுக்கிறார்கள்; நீ அப்படிச் செய்கிறதற்கு உன் தேவனாகிய கர்த்தர் உத்தரவுகொடார்.

### நியாயத்தீர்ப்பு

2 ராஜா 21 : 6. தன் குமாரனைத் தீமிதிக்கப்பண்ணி, நாள்பார்க்கிறவனும் நிமித்தம்பார்க்கிறவனுமாயிருந்து, அஞ்சனம் பார்க்கிறவர்களையும் குறிசொல்லுகிறவர்களையும் வைத்து, கர்த்தருக்குக் கோபமுண்டாக அவர் பார்வைக்குப் பொல்லாப்பானதை மிகுதியாய்ச் செய்தான்.

ஏசா 2 : 6, மீகா 5 : 12, லேவி 20 : 6, 27.

### தீர்வு

ரோமர் 14 : 5. அன்றியும், ஒருவன் ஒருநாளை மற்றொருநாளிலும் விசேஷமாக எண்ணுகிறான்; வேறொருவன் எல்லா நாட்களையும் சரியாக எண்ணுகிறான்; அவனவன் தன்தன் மனதிலே முழு நிச்சயத்தை உடையவனாயிருக்கக்கடவன்.

கொலோ 2 : 16.

## 81. ஊழியம் செய்யாதிருத்தல் :

### தேவ கட்டளை

கொலோ 4 : 17. அர்க்கிப்பைக் கண்டு: நீ கர்த்தரிடத்தில் பெற்ற ஊழியத்தை நிறைவேற்றும்படி கவனமாயிருப்பாயாகவென்று சொல்லுங்கள்.

2 தீமோ 4 : 5. ..... உன் ஊழியத்தை நிறைவேற்று.

மத் 28 : 19, 20 , மாற்கு 16 : 15.

### நியாயத்தீர்ப்பு

உபா 28 : 47. சகலமும் பரிபூரணமாயிருக்கையில், நீ மனமகிழ்ச்சியோடும் களிப்போடும் உன் தேவனாகிய கர்த்தரைச் சேவியாமற்போனதினிமித்தம்,

48. சகலமும் குறைவுபட்டு, பட்டினியோடும் தாகத்தோடும் நிர்வாணத்தோடும், கர்த்தர் உனக்கு விரோதமாய் அனுப்பும் சத்துருக்களைச் சேவிப்பாய்; அவர்கள் உன்னை அழித்துத் தீருமட்டும், இருப்பு நுகத்தடியை உன் கழுத்தின்மேல் போடுவார்கள்.

